TNMD140005272020

Presented on : 20-11-2020
Registered on : 20-11-2020
Decided on : 19-06-2026
Duration : 5 years, 6 months, 29 days

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருமங்கலம்

முன்னிலை:–**திரு.ப.செல்வகுமார், பி.ஏ., பி.எல்.,**

நீதித்துறை நடுவர், திருமங்கலம்

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.140/2020

**CNR No.TNMD14 - 000527 - 2020**

*****

அரசுக்காக ஆய்வாளர்,
திருமங்கலம் தாலுகா காவல் நிலைய
குற்ற எண்.257/2018
சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC .... குற்றமுறையிடுபவர்

/எதிரிடை/

திலீபன் (வயது 29/2018),
த/பெ.பிரபாகரன்,
வண்ணியர் தெரு,
விருதுநகர் மாவட்டம். ... குற்றம் சாட்டப்பட்டவர்

| | | | |
|---|---|---|---|
| 1. | **ஆண்டு பட்டிகை வழக்கு எண்.140/2020** | | |
| 2. | காவல் நிலைய பெயர் & குற்ற எண் | | திருமங்கலம் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.257/2018 |
| **குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த விபரம்** | | | |
| 3. | எதிரியின் பெயர் | : | திலீபன் |
| 4. | எதிரியின் தந்தை பெயர்/கணவர் பெயர் | : | பிரபாகரன் |
| 5. | தொழில் | : | கூலி |

| | | | |
|---|---|---|---|
| 6. | எதிரியின் முகவரி | : | வண்ணியர் தெரு, விருதுநகர் மாவட்டம். |
| 7. | எதிரியின் வயது | : | 29/2018 |
| | **தேதி விபரங்கள்** | | |
| 8. | சம்பவம் | : | 17.09.2018 |
| 9. | புகார் | : | 18.09.2018 |
| 10. | கைது தேதி | : | 24.09.2018 |
| 11. | பிணை விடுப்பு | : | Station bail |
| 12. | Committal | : | -- |
| 13. | விசாரணை துவக்கம் | : | 17.04.2024 |
| 14 | விசாரணை முடிவு | : | 12.06.2026 |
| 15. | தண்டணை (அ) ஆணை | : | குற்றவாளி இல்லை என தீர்மானிக்கப்படுகிறது. |
| 16. | தீர்ப்புரை நகல் (அ) நீதிமன்ற முடிவு எதிரிக்கு சார்பு செய்தல் | : | |
| 17. | Period of Remand of the accused | : | - |
| 18. | Date of filing of the final report | : | 20.11.2020 |
| 19. | Date of questioning U/s.240, 246 & 251 of Cr.pc | : | 18.10.2022 |
| 20. | Miscellaneous petition and their results | : | - |
| 21. | Date of examination in chief and cross | : | |

| PW's | Chief | Cross |
|---|---|---|
| 1. | 17.04.2024 | 17.04.2024 |
| 2. | 12.06.2024 | -- |
| 3. | 10.07.2024 | 10.07.2024 |
| 4. | 26.07.2024 | -- |
| 5. | 26.07.2024 | 26.07.2024 |
| 6. | 16.09.2025 | 16.09.2025 |
| 7. | 28.10.2025 | 28.10.2025 |
| 8. | 27.05.2026 | 27.05.2026 |

| | | | |
|---|---|---|---|
| 22. | Date of examination accused U/s.313 Crpc | : | 06.06.2026 |
| 23. | Details of abscondence of accused and his appearance/production | : | Nil |
| 24. | Grant of stay by Superior court and the results thereof | : | Nil |
| 25. | **காலதாமத்திற்கான காரணம்:** சாட்சிகளை உரிய தேதியில் ஆஜர்படுத்தாததால் காலதாமதம் | | |

இவ்வழக்கானது 20.11.2020ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை –2, ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி.K.கற்பகவள்ளி அவர்கள் ஆஜராகி இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கு 12.06.2026ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்.

## தீர்ப்புரை

கடந்த 17.09.2018ம் தேதி மதியம் சுமார் 03.50 மணியளவில் வாதியின் கணவர் அவரது நண்பர்களுடன் TN 67 BF 5810 என்ற ரெனால்ட் காரில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நான்கு வழிச்சாலையில் மதுரையிலிருந்து விருதுநகருக்கு திருமங்கலம் தாண்டி இராயபாளையம் விலக்கிற்கு அடுத்து காரை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வரும்போது காரின் முன்பக்க டயர் வெடித்து சென்டர் மீடியனில் கார் மோதி விபத்துக்குள்ளாக்கி வாதியின் கணவருக்கு இறப்பை ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளதாக கூறி எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளதாக திருமங்கலம் தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச பிரிவு 207ன் படி இலவசமாக வழங்கப்பட்டு குற்றம் குறித்து வினவிய போது எதிரி குற்றவாளி இல்லை என்றார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

3. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையுள்ள சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சாஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 திருமதி.யோகராணி என்பவர் தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்து போன மரகதவேல் தனது கணவர் என்றும், கடந்த 17.09.2018ம் தேதியன்று தனது கணவர் நண்பர்களுடன் திலீபனுக்கு சொந்தமான TN 67 BF 5810 என்ற காரில் திலீபன் ஓட்டிகொண்டு மதுரை செல்வதாக சொன்னதாகவும், அதே நாள் மாலை 03.50 மணியளவில் தான் பள்ளியில் பணியிலிருந்த போது தனது கணவரின் நண்பர் கன்னிராஜ் தனக்கு போன் செய்து தன் கணவருக்கு விபத்து ஏற்பட்டது என்றும், திருமங்கலம் அரசு மருத்துவமனைக்க கொண்டு சென்று அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக கூறியதாகவும், தான் மருத்துவமனை சென்று பார்த்த போது அவர் சுயநினைவில் இல்லை என்றும், அவருக்கு பக்கவாட்டு தலையில் பலத்த இரத்தகாயம் இருந்தது என்றும், அதே நாள் இரவு 10.50 மணியளவில் தனது கணவர் இறந்துவிட்டதாக சொன்னதாகவும், சம்பவம் குறித்து புகார் கொடுத்ததாகவும், மேற்படி புகார் அ.சா.ஆ.1 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கின் சம்பவ சாட்சியான அ.சா.2 திரு.ஆரோக்கியராஜ் தனது சாட்சியத்தில் கடந்த 17.09.2018 அன்று விருதுநகரிலிருந்து காருக்கு உதிரி பாகங்களை வாங்குவதற்காக காரை திலீபன் ஓட்ட, தானும் கனிராஜ், மரகதவேல் ஆகியோர்கள் சென்று கொண்டிருந்ததாகவும், மதுரை சென்றுவிட்டு மீண்டும் திரும்பி சிவரக்கோட்டை அருகே வரும் போது தான் தூங்கிவிட்டதாகவும், காரானது மீடியேட்டரில் மோதி நின்றது என்றும், தனக்கு கை, கால்களில் சிறு சிறு காயம் ஏற்பட்டு இருந்தது என்றும், தன்னுடன் வந்தவர்களுக்கும் சிறு காயம் ஏற்பட்டது என்றும், மரகதவேலுக்கு மட்டும் பலத்த காயம் ஏற்பட்டு அவரை மதுரை ராஜாஜி

மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாகவும், சிறிது நேரத்தில் மரகதவேல் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், சம்பவத்தின் போது எதிரி தான் காரை ஓட்டி வந்தார் என்றும், சாட்சியம் அளித்துள்ளதால் அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

6. இவ்வழக்கின் மற்றொரு சம்பவ சாட்சியான அ.சா.4 திரு.கனிராஜ் தனது சாட்சியத்தில் சுமார் 6 வருடங்களுக்கு முன்பு தானும், திலீப்பன், மரகதவேல், ராஜு ஆகியோர்கள் காரில் மதுரைக்கு சென்றுவிட்டு மீண்டும் விருதுநகர் நோக்கி வந்த போது மாலை 3 மணியளவில் சிவரக்கோட்டைக்கு முன்பு வந்து கொண்டிருந்த போது டமார் என்று சத்தம் கேட்டு பார்த்த போது தாங்கள் சென்ற காரானது சாலையில் உருண்டுவிட்டது என்றும், தான் மயங்கிவிட்டேன் என்றும், மாலை 6 மணியளவில் மயக்கம் தெளிந்து பார்த்த போது மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றும், மேற்படி விபத்தில் தனக்கு வலதுகாலில் காயம் இருந்தது என்றும், மரகதவேலுக்கு தலையிலும் முகத்திலும் காயம் இருந்தது என்றும், காரை ஓட்டிய திலீபனுக்கு தோள்பட்டையில் காயம் இருந்தது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளதால் அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

7. இவ்வழக்கின் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 திரு.மூர்த்தி தனது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ராயபாளையம் விலக்கு அருகே நடந்த விபத்து சம்மந்தமாக போலீசார் படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகசரில் தானும் சுந்தரபாண்டியும் கையெழுத்து போட்டதாகவும், மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் அ.சா.5 திரு.மூக்கன் தனது சாட்சியத்தில் தான் இதற்கு முன்பு 26.02.2019 அன்று திருமங்கலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணியிலிருந்த போது TN 67 BF 5810 என்ற இலகுரக காரை அன்றைய தினமே அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்ததாகவும், அந்த ஆய்வில் வாகனத்தில் முன்பக்க வலது டயர், முன்பக்க காற்று தடுப்பு கண்ணாடி, இடது புற முன் மற்றும் பின் கதவுகள், மேற்கூரை பேனட் முன் இடது மற்றும் வலது மக்கார்டு மற்றும் ஸ்டேரிங்

ஆகியவைகள் சேதமடைந்து காணப்பட்டதாகவும், வாகனம் முற்றிலும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டதால் வாகனத்தின் கைத்தடைதிறன் மற்றும் கால்தடைதிறன் கண்டறிய முடியவில்லை என்றும், இந்த விபத்து எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்றும் கருத்து தெரிவித்து தான் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.3 என சாட்சியம் அளித்துள்ளார்.

9. இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான அ.சா.6 திரு.சரவணன் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 18.09.2018 அன்று காலை 6.00 மணிக்கு திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.257/2018 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் படி வழக்கு பதிவு செய்ததாகவும், அந்த அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், வழக்கு விசாரணைக்காக திருமங்கலம் தாலுகா காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்ததாகவும், ஆய்வாளர் தன்னை விசாரணை செய்ததாகவும் சாட்சிம் அளித்துள்ளார்.

10. இவ்வழக்கின் மேல் விசாரணை அதிகாரியான அ.சா.7 திருமதி.சுமதி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் இதற்கு முன்பு கடந்த 18.09.2018 அன்று திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்த போது குற்ற எண்.257/2018, பிரிவுகள் 279, 304(A) இதசவின் படியான வழக்கில் சார்பு ஆய்வாளர் சரவணன் என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கு விசாரணைக்காக தன்னிடம் அனுப்பப்பட்ட வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துகொண்டு, சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 என்றும், மேலும் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு அன்றைய தினமே மதுரை ராஜாஜி மருத்துவமனையில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேதத்தின் மீது விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததாகவும், அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 என்றும், மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் சிவக்குமார் மூலம்

அரசு மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பியதாகவும், விபத்தில் TN 67 BF 5810 என்ற காரை மோட்டார் வாகன ஆய்வுக்காக வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பியதாகவும், அதன்பின்பு 24.09.2018 அன்று காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்ததாகவும், அதன் பின்பு சார்பு ஆய்வாளர் சரவணன், தலைமை காவலர் சிவக்குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், வழக்கு கோப்பை அடுத்து வந்த காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்த விசாரணை அதிகாரியான அ.சா.8 திரு.பவுல் யேசுதாசன் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் கடந்த 2019ம் வருடம் திருமங்கலம் தாலுகா காவல் நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது கடந்த 17.09.2018ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட திருமங்கலம் தாலுகா காவல் நிலைய குற்ற எண்.257/2018, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் படி வழக்கு பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை பார்வையிட்டு மேல் விசாரணைக்கு எடுத்து கொண்டு, எதிரி ஓட்டி வந்த காரை ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தின் படி ஆய்வு மேற்கொண்டு மோட்டார் வாகன ஆய்வு சான்று வழங்கிய திருமங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு 03.03.2019 அன்று புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

12. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் முடித்துக்கொள்ளப்பட்டு எதிரிக்கு எதிராக தோன்றிய அரசு தரப்பு சாட்சிய சங்கதிகளை தொகுத்து எதிரியிடம் குவிமுச பிரிவு 313(1)(ஆ)படி வினவியபோது எதிரி சாட்சியை " பொய் சாட்சி " எனக் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை எனச் சொன்னார். எதிரி தரப்பில் சான்று பொருளும் குறியீடு செய்யப்படவில்லை.

13. இங்கு தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் போதுமான மற்றும் தெளிவான சாட்சியங்கள், சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

14. இந்த வழக்கு சம்பவம் குறித்து சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக அ.சா.2 மற்றும் 4 விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அ.சா.2 மற்றும் 4 தங்களது சாட்சியத்தில் சம்பவத்தின் போது காரை ஓட்டி வந்த நபர் அதிவேகமாக ஓட்டி வந்ததாகவோ அஜாக்கிரதையாக ஓட்டி வந்ததாகவோ குறிப்பிட்டு எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. அதற்கு மாறாக அ.சா.2 அவரது சாட்சியத்தில் மதுரை சென்று விட்டு மீண்டும் திரும்பி சிவரக்கோட்டை அருகே வரும் போது தான் தூங்கிவிட்டேன் என்றும், காரானது மீடியேட்டரில் மோதி நின்றது என்றும் சாட்சியம் அளித்துள்ளதால் அவர் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். மேலும், அ.சா.4 அவரது சாட்சியத்தில் காரில் மதுரைக்கு சென்றுவிட்டு மீண்டும் விருதுநகர் நோக்கி வந்த போது மாலை 3 மணியளவில் சிவரக்கோட்டைக்கு முன்பு வந்து கொண்டிருந்த போது டமார் என்று சத்தம் கேட்டு பார்த்த போது தாங்கள் சென்ற காரானது சாலையில் உருண்டுவிட்டது என்றும், தான் மயங்கிவிட்டேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளதால் அவர் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். மேற்படி எந்தவொரு சம்பவ சாட்சியும் சம்பவத்தின் போது எதிரி தான் விபத்திற்குள்ளான வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று எந்தவித சாட்சியமும் அளிக்கவில்லை. இவர்களை தவிர வேறு எந்தவொரு நபரும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் சம்பவம் பற்றி கேள்விபட்ட சாட்சியான அ.சா.1 அவரது குறுக்கு விசாரணையில் சம்பவ விபரங்கள் அனைத்தும் தனக்கு நேரடியாக தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் போலீசார் கையெழுத்து வாங்கினதில் என்ன எழுதியுள்ளது என்று தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

15. மேலும், இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனத்தை சம்பவத்திற்கு பிறகு மோட்டார் வாகன அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. இது போன்ற வழக்குகளை பொறுத்தவரையில் மோட்டார் வாகன ஆய்வாளரை சம்பவயிடத்திற்கு வரவழைத்து சம்பவயிடத்தை பார்வையிட்டு சம்பவயிடத்தில் ஏற்பட்டுள்ள டயர் மார்க்குகளை குறியீடு செய்து ஆய்வு செய்தால் தான் விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்பட்டதா என்பது தெரியவரும். மேலும் வழக்கில் சொல்லப்பட்டுள்ள

வாகனத்தை 5 மாதங்களுக்கும் மேலாக மோட்டார் வாகன ஆய்வாளரின் அலுவலகத்திற்கு அனுப்பி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் காலதாமதமாக ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே, இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி மோட்டார் வாகன ஆய்வாளரை சம்பவயிடத்திற்கு வரவழைத்து சம்பவயிடத்தை பார்வையிட்டு சம்பவயிடத்தை வைத்து விபத்திற்குள்ளான வாகனங்களை ஆய்வு செய்வதற்கும் டயர் மார்க்குகளை குறியீடு செய்வதற்கும் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

16. எனவே, எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்று நிரூபணம் செய்யும் வகையில் சம்பவ சாட்சிகள் அரசு தரப்பில் பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், பார்வை மகசர் சாட்சிகள் அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், மோட்டார் வாகன ஆய்வாளரை சம்பவயிடத்திற்கு வரவழைப்பதற்கு புலன் விசாரணை அதிகாரி எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளபடாத நிலையிலும் சம்பவத்தில் ஈடுபட்ட வாகனத்தை காலதாமதமாக ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட நிலையிலும், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி முறையாக விசாரணை மேற்கொண்டு தான் இந்த வழக்கின் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளாரா என்ற சந்தேகம் எழுகின்றது. ஆக மேற்கண்டவாறு எழுந்துள்ள சந்தேகங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்பதை அரசு தரப்பில் தக்க சாட்சியம் மற்றும் சான்றாவணம் அடிப்படையில் நிரூபிக்க தவறியுள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

17. முடிவில், அரசு தரப்பு வழக்கில் மேற்கண்டவாறு எழுந்துள்ள சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்குவதே நீதியின் பால் உகந்தது என்று கருதி, சந்தேகங்களின் பலன்களை எதிரிக்கு வழங்கி எதிரியை இந்திய தண்டனை சட்டம் பிரிவு 304(A) IPCன் கீழ் குற்றவாளி அல்ல என தீர்மானித்து எதிரியை குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி ஏற்கனவே எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்தரவிடப்படுகிறது.

18. சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்ல அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 19.06.2026 அன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

<u>பின்னிணைப்பு:–</u>

**<u>1. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளின் மாதிரி அட்டவணை:–</u>**

| அரசு தரப்பு சாட்சி எண். | அரசு தரப்பு சாட்சியின் பெயர். | அரசு தரப்பு சாட்சியின் பங்கு |
|---|---|---|
| 1. | திருமதி.யோகராணி | புகார்தாரர் |
| 2. | திரு.ஆரோக்கியராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| 3. | திரு.மூர்த்தி | பார்வை மகசர் சாட்சி |
| 4. | திரு.கனிராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| 5. | திரு.மூக்கன் | வாகன தணிக்கை செய்து சான்று வழங்கிய சாட்சி |
| 6. | திரு.சரவணன் | விசாரணை அதிகாரி |
| 7. | திருமதி.சுமதி | விசாரணை அதிகாரி |
| 8. | திரு.பவுல் யேசுதாசன் | மேல்விசாரணை அதிகாரி |

**<u>2. அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் மாதிரி அட்டவணை:–</u>**

| ஆவண எண். | ஆவணத்தின் பெயர். | ஆவணத்தை நிரூபித்த/ சான்றளித்த சாட்சி |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.1 |
| 2. | பார்வை மகசர் | அ.சா.3 |
| 3. | மோட்டார் வாகன அறிக்கை | அ.சா.5 |
| 4. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 |

| | | |
|---|---|---|
| 5. | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| 6. | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.7 |

3. **<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u>**: இல்லை

4. **<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:</u>** இல்லை

(ஒம்)திரு.ப.செல்வகுமார்.,
நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.

**<u>குறிப்பு</u>:**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. விசாரணை காலத்தில் எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.

**<u>நகல்:</u>**

மாண்புமிகு மதுரை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

**/உண்மை நகல்/**

SELVAKUMAR Digitally signed by SELVAKUMAR Date: 2026.06.19 13:32:44 +0530

நீதித்துறை நடுவர்,
திருமங்கலம்.